இணைப்பு IX.

[80ம் பக்கத்திலுள்ள உடுக்குறியிடாத வினா எண் 46-க்கான விடையைக் காண்க]

விவர அறிக்கை.

சென்னையில் உள்ள ஓவியக்கலைத் தொழில் கல்லூரி அபிவிருத்திக்கு அரசு எடுத்த நடவடிக்கை வருமாறு :

1975–76 இரண்டாம் திட்டப்பகுதி (Part II Scheme) ஆக கீழ்க்கண்ட பாடங்கள் துவக்குவதற்கும், புதிய வகுப்புகள் நடத்த கட்டிடங்கள் கட்டவும் மாணவர்களுக்கு விடுதி கட்டவும் சில பதவி உயர்வுகளுக்கும் கூடுதல் பணியாளர்களை அமர்த்தவும் ஆணை வழங்கப்பட்டது.

(1) Photography

(2) Lithography

(3) Blockmaking

(4) Silk Screen Painting

(5) Book Binding & Packaging

(6) Interior Decoration Window Display and Exhibition Designs.

ஓவியம் மற்றும் சிற்பக்கலை நிறுவனங்கள் முன்னேற்றத்திற்கும் நல்லமுறையில் நடத்திச் செல்லுவதற்கும் செயலர் கல்வித்துறை அவர்களை தலைவராகக் கொண்டு ஆலோசகர்கள் குழு (Advisory Committee for the Arts and Crafts Institution in Technical Education Department) ஒன்றை அரசு ஆணை எண். 36, கல்வி, நாள் 6–1–78-ல் நியமிக்கப்பட்டுள்ளது. இந்த ''ஆலோசகர்கள் குழு'' 21–3–78 கூடி ஓவியக் கல்லூரியின் முன்னேற்றத்திற்கான ''திட்டத்தாள்''. (Working Paper) ஒன்றை கீழ்க்கண்ட பொருள்களின் மேல் தயாரிப்பதற்கு முடிவு எடுத்தது :—

(i) To introduce a Degree course in Industrial Design affiliated to the University of Madras.

(ii) To continue to offer the present diploma and post Diploma Programmes till such time the affiliation of the University of Madras is sought for and obtained for the existing programme.

(iii) To introduce new electives under the Diploma courses.

(iv) To equip the College with additional physical facilities such as buildings, equipment and library.

(v) To provide hostel accommodation for about 50 students.

(vi) To restructure the present staff pattern and revise it on par with the other Arts and Crafts Institutions in the country.

(vii) To provide adequate scholarships and stipendary facilities to the students.

இதன்படி தயாரிக்கப்பட்ட ''திட்டத்தாள்'' விரைவில் குழுவிற்கு முன் வைக்கப் போவதாக தொழில் நுட்பக் கல்வித்துறை இயக்குநர் அறிவித்துள்ளார்.

1978–79 இரண்டாம் திட்டப்பகுதியாக நெசவு ஓவியக்கலை, மண்பாண்டக்கலை பாடங்களில் பட்டவகுப்பு (Degree level) படிப்பு துவக்க ஆணை எண். 1756, கல்வி நாள் 22–9–78-ல் ஆணை வழங்கப்பட்டது. இதன்படி ஒவ்வொரு பாடங்களிலும் 10 மாணவர்கள் வீதம் 3 பாடங்களுக்குச் சேர்க்கப்படும். இந்த ஆணையின் பிரகாரம் 1978 நவம்பர் மாதத்திலிருந்து இப்பட்டப்படிப்பு இக்கல்லூரியில் துவக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநில தொழில் நுட்பக்கல்வி மற்றும் பயிற்சி போர்டு (The State Board of Technical Education and Training Tamil Nadu) 27–1–78-ம் தேதி 23-வது கூட்டத்தில் இந்த ஓவியக்கலைக் கல்லூரியை பட்டப்படிப்பு மட்ட கல்லூரியாக்க வேண்டும் என பரிந்துரைத்துள்ளது. மேலும், 21–11–78-ம் நாள் நடந்த கூட்டத்தில் ஓவியம் தீட்டுதல் (Painting) மற்றும் சிற்பக்கலை (Sculpture) இந்த பாடங்களிலும் பட்டப்படிப்பு அளவில் பாடத்தை கொண்டு வரவேண்டும் எனவும் பரிந்துரைத்துள்ளது.

இக்கல்லூரியின் ஆசிரியர்களுக்கு பல்கலைக்கழக மானியக்குழு சம்பளவிகிதம் தரப்படுகிறது.